உ சிவமயம்

# ஸ்ரீ லயன் சித்தி விநாயகர் கோவில்

73 கியோங் சைக் ரோடு , சிங்கப்பூர் – 089167, தொலைபேசி : 62214853



## சதுர் லட்ச ஜப ஹோமம்

சதுர் லட்ச ஜப ஹோமம் என்பது அருள்மிகு லயன் சித்தி விநாயகர் கோயிலில் நடைபெறும் ஒரு சிறப்பு வழிபாடு ஆகும். வடமொழியில் சதுர் என்றால் நான்கு. லட்சம் என்றால் நூறாயிரம். விநாயகர் மூல மந்திரத்தை நானூறாயிரம் முறை உச்சாடனம் செய்து, நாற்பதாயிரம் முறை ஹோம ஆவர்த்தி செய்வது சதுர் லட்ச ஜப ஹோமம் ஆகும். இந்த ஹோமம் செய்வதால் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் இறைசக்தி வலுப்படுத்தப்பெற்று, அதனால் பக்தர்களுக்குக் கிடைக்கும் பலன் பன்மடங்காகும் என்பது நம்பிக்கை.

**ஹோமத்தின் பலன்** :
தேச ஒற்றுமை நீடிக்கவும், இயற்கை இடர்களின்றிக் காக்கவும் நமக்கெல்லாம் விநாயகப் பெருமான் திருவருளால் அனைத்து நலன்களும் பெருகவும் எடுத்த காரியம் யாவினும் வெற்றி பெறவும், எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருளை வேண்டி இதில் பங்கு பெறுவோம்.

*இந்த ஆண்டு சதுர் லட்ச ஜப ஹோமம் சுபகிருது வருஷம் ஆவணி மாதம் 2ம் நாள் (18.08.2022) வியாழக்கிழமையன்று தொடங்கி ஆவணி மாதம் 11ம் நாள் (27.08.2022) சனிக்கிழமையன்று பூர்த்தி செய்யப்பட இருக்கிறது.*

**கட்டணம்**:

- சதுர் லட்ச ஜப ஹோமத்தில் 10 நாட்களும் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் $1,101/- வெள்ளி கொடுத்து தினசரி பெயர் நட்சத்திரம் சொல்லி சங்கல்பம் செய்து கொள்ளலாம். அல்லது
- ஒரு நாள் மட்டும் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் $121/- வெள்ளி செலுத்தி சேர்ந்து கொள்ளலாம்.

**பிரசாதம்**:

- 10 நாட்கள் உபயத்தில் சேரும் பக்தர்களுக்கு நிறைவு நாளன்று பூஜையில் வைத்த **வெள்ளி கட்டிய ருத்திராட்ச மாலையுடன், தங்கம் கட்டிய ருத்திராட்சம் ஒன்று** கொடுக்கப்படும்.
- ஒரு நாள் சேரும் பக்தர்களுக்கு பூஜையில் வைத்த **ருத்திராட்ச மாலையுடன் வெள்ளி கட்டிய, ருத்திராட்சம் ஒன்று** கொடுக்கப்படும்.

உபயத்தில் சேரும் பக்தர்கள் அனைவருக்கும் தினசரி பிரசாதமாக, காளாஞ்சியும் வழங்கப்படும்.

பக்தப் பெருமக்கள் ஆலய அலுவலகத்தில் கட்டணத்தைச் செலுத்தி ரசீது பெற்று, இந்தச் சிறப்பு ஹோமத்தில் கலந்து கொண்டு விநாயகப் பெருமான் திருவருள் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்

ஆலய மேலாண்மைக்குழு, செட்டியார் கோயில் குழுமம்